| | | |
|---|---|---|
| சாட்சி : DW 3<br>திரு.குணசேகரன்<br>த/பெ.திரு.மருதை | அ.வ.எண். 938/1995 | 09.07.2026 |

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) எனது மனைவி பெயர் என்ன என்றால் மாலதி. நான் வழக்கு சொத்தில் ஒரு பகுதியை எப்போது கிரையம் பெற்றேன் என்றால் 24.05.2001 ல். நான் கிரையம் பெறும்போது விசாரித்து கிரையம் பெற்றேனா என்றால் விசாரித்து தான் கிரையம் பெற்றேன். எனது கிரையதாரரான அம்சவள்ளி மேற்படி சொத்தை எப்போது கிரையம் பெற்றார் என்றால் 24.04.1987 ல். எனது கிரையதாரரான அம்சவள்ளி கிரையம் பெறும்போது விசாரித்து கிரையம் பெற்றாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) மேற்படி சொத்து அம்சவள்ளிக்கு முன்பு, பாலாம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். மேற்படி பாலாம்மாள் மேற்படி சொத்தை எவ்வாறு பெற்றார் என்று தெரியுமா என்றால் அது அவரது பூர்வீக சொத்து. மேற்படி பாலாம்மாள் மேற்படி சொத்தில் 70 ஆண்டுகளாக வீடு கட்டி குடியிருந்து வந்தாரா என்றால் பாலாம்மாளின் வீடு கட்டி தற்போது 70 ஆண்டுகள் ஆகிறது.

3) எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி பாலாம்மாளுக்கு முன்பு அவரது கணவர் சீனிவாச ராஜுக்கு மேற்படி சொத்து பாத்தியப்பட்டிருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான், அவரது பூர்வீக சொத்து. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில், வாதி கோவில் 94 சென்ட் மட்டுமே உரிமை உள்ளதாக எதை வைத்து கூறுகிறேன் என்றால் ரீசர்வேயில் புல எண்.68/2 ஐ கோவிலுக்கு

உட்பிரிவு செய்ததை வைத்து சொல்கிறேன். எப்போது ரீசர்வே செய்யப்பட்டது என்றால் எனக்கு நியாபகம் இல்லை.

4) வாதி கோவிலை சுற்றி காம்பவுண்ட் உள்ளதா என்றால் உள்ளது. வாதி கோவிலை சுற்றி வீதி உள்ளதா என்றால் உள்ளது. கோவில் வீடுகள் வீதியை பார்த்து உள்ளதா என்றால் கோவில் வீடுகள் இல்லை. மேல்வாரம் பாத்தியம், அடிவாரம் பாத்தியம் என்பது என்ன என்றால் தெரியாது. எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் மேல்வாரம் பாத்தியம், அடிவாரம் பாத்தியம் குறித்து கூறியுள்ளேன் என்றால் சரிதான். கோவிலில் மேல்வாரம் பாத்தியம், அடிவாரம் பாத்தியம் என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல.

5) அரியலூர்–திருச்சி ரோடு எங்கு செல்கிறது என்றால் எனது வீட்டிற்கு தெற்கே. எனது வீடு தெற்கே பார்த்து உள்ளதா என்றால் ஆமாம். அறநிலை துறை சட்டம், இனாம் சட்டம் ஆகியவை எப்போது வந்தது என்றால் அதுபற்றி தெரியாது, ஆனால் மேற்படி சட்டங்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே கிரையம் ஏற்பட்டுவிட்டது.

6) மேற்படி சட்டங்கள் எப்போது வந்தது என்று எனக்கு தெரியாததால், மேற்படி சட்டங்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே கிரையம் ஏற்பட்டுவிட்டதா என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, கேள்விப்பட்ட வகையில் சொல்கிறேன். இது குறித்து கிரைய ஆவணங்களில் எவ்வித வாசகங்களும் இல்லை என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள கிரைய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

7) மேற்படி ஆவணங்களை படித்து பார்த்தால் தான் இனாம் சொத்தா, இல்லையா என்று தெரியும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அனைத்தும் இனாம் சொத்து என்றாலும், எனவே இனாம் உத்தரவு என்னை கட்டுப்படுத்தும் என்றாலும் சரியல்ல, நீதிமன்ற தீர்ப்பு எதுவும் இதுவரை இல்லை.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.